இப்பள்ளியின் பழைய மாணவரும், விலங்கியல் மருத்துவத்துறை நிபுணருமான டாக்டர் V. S. **ஆழ்வார்** அவர்கள் பரிசுகள் வழங்கியும், கலைநிகழ்ச்சிகளுக்குத் தலைமை ஏற்றும் சிறப்பித்தார்கள். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவேறியது.

தொகுப்பு: **இரா. பார்த்தசாரதி,**
தமிழாசிரியர்.



நூற்றாண்டு விழா காணும் நமது மேல்நிலைப்பள்ளிக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!

காஞ்சிபுரம் மற்றும் எல்லா ரக பட்டு,
மில் & கைத்தறி ஜவுளிகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

பழனிக்குமார் ஜவுளி ஸ்டோர்ஸ்,

25, பெரியகடை பஜார்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

உரிமையாளர் :- S. A. சுப்பிரமணியஞ் செட்டியார் & சன்ஸ்.

எங்களிடம் G. K. C. கணேஷ் பனியன்கள் கிடைக்கும்.

எங்களது நல்வாழ்த்துக்கள்!

பெண்களுக்கு அழகைக்கொடுத்து
வசீகரிப்பதில் இணையற்றது

"T. M. G. S. சுகுந்தா குங்குமம்"

தயாரிப்பாளர் :

T. M. G. ஸ்ரீனிவாசய்யங்கார்,
132, ஆதியப்பநாயக்கன் தெரு,
மதராஸ் - 600 001.

☎ 31419

WITH
BEST
COMPLIMENTS
FROM

NAVRANG DYEING PRIVATE LIMITED

SPECIALISED IN:


HAND PROCESSING OF BLEACH,
MERCERISE, MULLS & DHOTY.

FACTORY:

Plot A-91/92,
M. I. D. C.
DOMBIVLI.
Phone: 340

OFFICE:

573, Girgaum Road,
Chira Bazar,
BOMBAY - 400 002.
Phone: 313002/8.
Telex: 011-5749 RANG IN
Cable: NAVEXORANG.



என் மதிப்பிற்குரிய பள்ளி

A. தணிகாசலம் B.Sc ,B.L.,
XVII மெட்ரோ பாலிடன் மாஜிஸ்ட்ரேட்,
சைதாப்பேட்டை, சென்னை - 15.

என் ஆசிரியர் மாதா, பிதா, குருதெய்வம் என்று அடிக்கடி கூறுவார். உண்மைதான். தாயும், தந்தையும் என்னை உருவாக்கிய தெய்வமாவார்கள். அடுத்து நமக்கு அறிவுக்கண்ணைக் கொடுத்து அனைத்தும் அறியுமாறு செய்த ஆசிரியர் ஒரு தெய்வமாவார். அடுத்து தெய்வம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஊனக்கண்ணிற்கு எட்டா அருவமாய், நம்மை ஆண்டுவரும் இறைவனைத் தான் குறிப்பிடுவர். உண்மைதான் அது என்றாலும், என்னளவில் அந்த இடத்தில் தெய்வமென்று பேசப்படுவது கற்பிக்கும் ஆசிரியர்க்கும், நமக்கும் நிழல்தந்து, கல்விக்கேற்ற உபகரணங்களை அளித்து, நம் வாழ்வோடு ஒன்றி நம்மால் என்றும் போற்றப்படுவதாய், நம் எண்ணத்தில் என்றும் பசுமையதாய் உள்ள கலைத் தெய்வம் வாழும் கலைக் கோயிலாம் பள்ளியைத் தெய்வமென்றால் தவறில்லையே. ஆதலின் பள்ளியைத் தெய்வம் என்பதால் குறிப்பிடப்படுகிறது என்று குறிக்கிறேன்.

என் பள்ளி வாழ்வில் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களெல்லாம் மாணவர் ஒவ்வொருவருடைய குறை, நிறைகளைக் கண்டறிந்து, குறை களைந்துத் தனிக் கவனம் செலுத்திக் கற்பித்து நிறையுடையாரை ஊக்குவித்துக் கற்பித்த பெருந்-தகையாளர்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாததன்றோ. பள்ளிப் படிப்புக்குப்பின் கல்லூரிகளில் பயின்றாலும், பணிபுரியச் சென்றாலும் இங்கு இடப்பெற்ற அஸ்திவாரமும், அடிப்படையறிவும், ஒழுக்கமும் இன்று என்னை இந்நிலைக்கு உயர்த்தியது என்று மகிழ்ந்து உள்ளம் பூரிப்படைகிறேன்.

நூறாண்டு விழாக் காணும் இந்நாளில், இப்பள்ளி மேலும் மேலும் வளர்ந்து, பல்கலைக் கழகமாகப் புகழ்பெற இறைவனை இறைஞ்சுகிறேன்.

பூவில்லிக்கு எட்டாத ஸ்ரீவில்லிபுத்தூர் செல்வம்!

வித்வான் ப. நீலா, எம்.ஏ.,
பேராசிரியை,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001

இந்தக்காலம் எல்லாவற்றையும் ஆராய்ச்சி என்ற கண்ணுடி அணிந்தே காண்கிறார்கள். இதில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. தொன்மையவாம் எனுமெவையும் நன்றுகா—இன்று தோன்றியவாம் எனுமெவையும் தீதாகா—என்று இதற்கான வரவேற்பும்—முன்பே அமைந்தது, சமீபத்தில் ஒரு செய்தி படித்தேன்.

சகரர் பாதாளம் வரை தோண்டியதால்—சாகரம் எனப் பெயர் வந்தது. யாகக் குதிரையை அப்படி அதுவரை தோண்டித் தேடினர்களாம். பிறகு கபிலராஸ்ரமத்தில் குதிரையைக் கண்டார்கள். அவரே குதிரையைத் திருடியதாகக் கருதி அவரை வருத்திட—அவர் அவர்களைப் பொசுக்கி விட்டதாக—இராமாயணக் கதை. நம்நாட்டுக்கு நேர்கீழே அமெரிக்கா இருக்கிறது. அது பாதாளம் என்றுல் அங்கே இருக்கும் கலிபோர்னியாதான் கபிலாரண்யம். அதற்குப் பக்கத்தில் குதிரைத்தீவும் (Horse Island) அதற்குப் பக்கம் சாம்பல்தீவும் (Ash Island) இருப்பது அறிக.

"குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயும் காத்த லரிது"—என்ற தத்துவம் இக்கதையால் விளக்கப் படுகிறது. இப்படியான கதையோ—சடங்கோ இல்லாமல் தத்துவங்களைப் புரிந்து கொள்வதும் கடினம். பிற்பாடு—தத்துவங்கள் மறந்துவிட—கதைகள் தங்கிவிட்டன. புராணக் கதைகள் கூட—சில தத்துவங்களை விளக்க வந்தவையே.

இன்னெரு உதாரணம். திருமணத்தில் அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல்—என்பது ஒரு சடங்கு. இதன் தத்துவம் என்ன? பலருமறியக் கற்பு வாழ்வில் புகும் மணமகளே! இதோ ஒன்றை நினைவில் கொள். இல்வாழ்விற்குப் பெருமை தரும் 'கற்பு' கண்போல் பேணப்பட வேண்டும். இதில் சோர்வு ஏற்பட்டால் என்ன ஆகும் எந்நிலை வரும்—தெரியுமா?

கற்புநிலை தவறினுள் முனிபத்தினி அகலிகை. இறைவன் அருளிய கர்ப்பத்தை—நெருப்பிலிட்டுத் தூயதாக்கிய பின்னும் ஏற்க மறுத்தாள் அருந்ததி (பரிபாடல் கருத்து). கற்பு தவறியவள் இதோ—உன் காலடியில் கல் வடிவில் கிடக்கிறுள். கற்பால் உயர்வு பெற்றவள் நீ நிமிர்ந்து பார்க்கும்படி அங்கே வானில் சுடர்விடு-

கிருள் —இனி உன் பாதையை நீயே தேர்ந்துகொள் — என்று அவள் கணவன் அவளிடம் கூறும் தத்துவம் பொதி சடங்கு — இன்று சடங்காகவே நிகழ்வதைப் பார்க்கிறோம்.

புராணத்துள் ஒரு காட்டு. இறைவனது இயல்பு ஆருயிர்க்கு அருள் செய்வதே. உயிரில் நாயுயிர் என்றோ நரருயிரென்றோ பேதமில்லையே! ஒரு சமயம் சூரபன்மாதியர்களின் தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள் அனைவரும் வேண்ட-அவர்கள் துன்பத்தினைத் துடைத்திட முருகவேளைப் படைத்தருளினன்.

பின்னொரு சமயம் மதுரை மாநகரில் தாய்ப்பன்றி இறந்துவிடவே தவித்த பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகி முலை கொடுத்தான் (திருவிளையாடல்—பன்றி முலை கொடுத்தபடலம்) இரண்டினையும் ஒருசேர எண்ணிப் பார்க்கிறார் தருமையாதீன முனிவர். பூவில்லிக்கு எட்டாத பூரண ஞானப்பிள்ளையால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாதீனத்தின் பத்தாவது மகாசந்நிதானம் அவர்கள் (ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்).

'பொன்னுசை' யென்ற தொடக்கமுடைய (திருவருட் பாத்திரட்டு) பாடலில்

'ஏழை பங்காளன் நீ என்றுனைச் சொல்வதிங்
கேழையடி யேன் தவிரவோ
முன்னுளில் ஒருமதுரை நகரினில் பன்றிக்கு
முலைகொடுத்தவன் அல்லவோ
முருகவேளைப் பெற்ற தந்தை அலவோ பெரிய
மூதுலகில் அடியார் மலக்
கன்னுர் உரித்துயிரை வாழையின் கனிசெயும்
கருணைப்ர வாக னன்றோ! — எனப்பாடுகிறார்.

சூரனுல் மிகமெலிந்த தேவர்கள் 'சிறந்த நோன்பியற்றுது—நாம் சிவனை வெறுத்தல் குற்றமே' என்றுணர்ந்தாலும் வேறுவழியின்றிப் பின்னும் சிவனையே தஞ்சமடைகிறார்கள்.

ஆதியும் நடுவுமீறும் அருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கு மின்பமுந் துன்பு மின்றி
வேதமுங் கடந்து நின்று விமலஞர் குமரன்தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க வென்றார்.

அவர்கள் வேண்டுகோட்படி "தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டு" செந்-சழல் மேனியன் தீயின் வண்ணமாத் தந்தனன் குமரனை. சீரணி சரவணஞ் சேர்ந்த குமரன் சரவணபவன் ஆனன்.

"அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றுப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்ப தோர் மேனி யாகக்
கரு ணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய"

(கந்தபுராணம் முதல் காண் 1—92)

தேவர் துன்பம் தொலைந்தது. ஆதியயனெடு தேவர் சுரருலகு ஆளும் வகையில் வேலை சுவறிட சூரனுடலற வேல் விட்டான். "வானேர் கொடியவினை தீர்த்த வேலப்பா"—எனப் போற்றிருர்கள்.

இப்படியே கருணை நிறைந்த கண்ணுதற் பெருமான் மதிதோய் மாடம் நின்ற மதுரையில் ஒரு செயல்செய்தான். இரண்டு சிங்கங்கள் சேர்ந்து நீரருந்தும் துறையில் ஒரு பன்றி துணிச்சலுடன் வந்து தாகம் தணித்துக்கொள்ளும். ஆனல் இரண்டு பன்றிகள் இருக்கும் துறையருகே ஒரு சிங்கம் வர அஞ்சும். இப்படியான வீரமிருந்துங்கூட தனது இழிந்த பழக்கத்தால் இகழ்தலுக்கு ஆட்பட்ட பிராணி பன்றி. தந்தை தாயிழந்து தவித்துநின்ற குருளைகளின் துன்பம் நீக்கக் கருதினன் கலிமதி முடித்தவன். பேடின் வடிவெடுத்து வருந்தும் கானவன்பறழ் கலக்கம் போக்கினன். ஏனம் இன்னமும் காண்பரிதாகி இவன் ஏனமாகிய கதையிது.

இரண்டு நிகழ்ச்சிகளாலும் வருத்தம் எங்கு வந்துற்றலும் விரைந்துவந்து கருணைக்கையால் காப்பான் நம் கடவுள் என்பதே விளங்கிடும் தத்துவமாகும்.

இறைவனின் கருணை பேதமின்றி எல்லா உயிர்களிடமும் சுரக்கும்போது (மிக உயர்ந்த தானத்திலிருக்கும் தேவர், மிகக்கீழான படியிலிருக்கும் பன்றி) என்பால்மட்டும் அக்கருணை வற்றிவிட்டதே! மனிதனகிய என்னை மறந்தது ஏனை? என்று தகைமையுடன் தர்க்கம் செய்கிறர்.

ஆகவே கதைகள் மூலமாக வெளிப்படும் தத்துவங்கள் அற்புதமானவை. சிந்திக்கச் சிந்திக்க ஆனந்தம் தருபவை. இந்தக் கருத்தை இப்படிச் சிந்திக்கத் தூண்டியவர் நம் குருஞானசம்பந்தப் பெருமானே. அந்தக் கருத்தை இங்கே கவினுற விளக்கப்பட்டது.

நோயால் வருந்தியுனை நூறுகுரல் கூப்பிட்டால்
நீயாரை னுதிருக்கை நீதியோ - தாயாய்
அலைகொடுத்தகேழல் அருங் குழருக் கன்று
முலை கொடுத்தாய் நீயலவோ முன் (சொக்கநாதவெண்பா 57)

தாயார் மகவருத்தம் சற்றும் தரியார்கள் என்று அடுத்த பாட்டில் சொல்வது உண்மையே உபசார வார்த்தையன்று—என்பது இந்நிகழ்ச்சியால் விளக்கப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் தந்த இரண்டு செல்வங்கள்—சைவத்துக் கொன்றும், வைணவத்துக் கொன்றுமாக ஒளிதருகின்றன. ஒப்புமை, பிறந்த இடத்தால் மட்டுமில்லை—பூண்ட கொள்கையாலும் அமைகிறது.

மானிடவர்க் கென்று பேச்சுப்படின் வாழகில்லேன் என்ருள் கோதை நாச்சியார். உன்னைச் சிங்காரித்து உன்னை அழகு பார்க்கவே இப்பிறவி—என்னைச் சிங்காரித்து இடர்ப்படமாட்டேன்-என்ருர் இந்த தவஞானி. பெரியோர்கள் தந்த 'ஞான' விளக்கைத் துணைகொண்டு ஞால இருளிலும் நடக்கலாமே! வாருங்கள் பாவமகற்றி ஞானப் பாதையில் நடப்போம்.

With best compliments from:

J. B. BODA MARINE & GENERAL SURVEY AGENCIES PRIVATE LTD.,



"WAVOO MANSION"
39, Rajaji Salai,
P. B. No. 1957
MADRAS - 600 001.

Cable: ENDURANCE ❋ Telex: 041-696 ❋ Tel: 20911

With best compliments from:

M/S. KRISHNA OFFSET PRINTERS,
M/S. JAI KRISHNA OFFSET PRINTERS,
(Leading Manufacturers of Wedding Cards,
Note-Book Wrappers, etc.,)
9/1, P K. S. A. Arumuga Nadar Road,
SIVAKASI - 626 123.

With best compliments from:



Thiru T. V. P. SUBBIAH,
Distributors for NEYVELI "LECO"
14, Hanumar Koil Padithurai,
Madurai - 625001

Always Use

GOPAL TOOTH POWDER



MANUFACTURERS:

S.P.S. JAYAM & CO.,

VEL CHEMICAL WORKS,
25, EAST NAPPALAYAM STREET,
MADURAI - 625 001.

☎ 24653

With best compliments from:

Scientific Advance Company,

109, Apparswami Koil Street,
MYLAPORE, **MADRAS** - 600 004.

Dealers in: SCIENTIFIC APPARATUS AND CHEMICALS.
Stockists : BDH, SM & S. D. LABORATORY CHEMICALS.
VENSIL & SIGCOL LABORATORY GLASSWARE.

★ **60th YEAR OF SERVICE TO SCIENCE** ★

T. F. 71034 P. B. No. 616 Telephone: 71034

கோதை தூது.

சே. ராதாராணி

கூடலிழைத்துக் குறிபார்த்த கோதை பலனைக் காணாததாலே குயிலைத் தூது விடுகிறாள். எம்பெருமானைக் கூவி அழைக்குமாறு வேண்டுகிறாள்.

இத்தூதுப் பாசுரங்கள் பிற்காலத்தில் "தூது எனத் தனி இலக்கியமாக எழ வழிகாட்டியாயிருந்திருக்க வேண்டும். எனவேதான் தூது என்பது தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஒருத்தி, தன் காதலை உயர்திணைப் பொருள்களிடத்தேனும் அஃறிணைப் பொருள்களிடத்தேனும் எடுத்துக்கூறி தூது செல்லுமாறு ஏவும் பொருளமைந்தது என இலக்கணம் செய்தனர். அதனைக் கலிவெண்பாவினால் இயற்ற வேண்டும் என்றனர். பயிறருக் கலிவெண்பாவினாலே,

"உயர்திணைப் பொருளையும், அஃறிணைப் பொருளையும்,
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியல் புலவர் நாட்டினர் தெரிந்ததே - என"

இலக்கண விளக்கம் இயம்புகிறது. மேலும் இன்னின்ன பொருட்களால் பாடலாம் என வரையறையும் செய்தனர்.

"இயம்புகின்ற காலத்து எகின மயில் கிள்ளை
பயம்பெறு மேகம், பூவை பாங்கி - நயந்தகுயில்
பேதை நெஞ்சம், தென்றல், பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை".

என்று இரத்தினச் சுருக்க நூற்பா செய்தமைத்தது, இதனுள் குயில் மட்டும் "நயந்த குயில்" என சிறப்பித்ததினால் அதனது தகுதி உயருகிறது.
குயிற்பத்து :- தனது பக்திப் பெருக்கினை ஆண்டாள் குயிலிடம் கூறி தூது செல்லச் சொல்கிறாள். இப்பதிகம் குயிற்பத்து எனப் பெயர் பெறுகிறது.

ஆண்டாள் திருமாளிகைச் சுற்றிலும் மலர் வனம். அவ்வனத்தில் புன்னை, குருகத்தி, கோங்கு, செருந்தி முதலிய மரங்கள். அவற்றில் குயில் தன் பெடையுடன் கூடி வாழ்கிறது. அக்குயில் எப்போதும் இறைவன் நாமத்தையே கூறுகிறது போலும்? எனவே ஆண்டாளின் ஆற்றாமை பெருகியது. கண்ணணோடு காதல் கொண்டதால் தான்பட்ட அல்லல்களை அறிவிக்கிறாள்.

"மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணிவண்ணன்
மணிமுடி மைந்தன்
தன்னை உகந்தது காரணமாக — என்
சங்கிழக்கும் வழக்குண்டே"

அந்த விமலன் தனக்கு உருக்காட்ட மாட்டான். ஆயினும் உள்ளம் புகுந்து நைவித்து நாளும் உயிர்ப்பெற்று கூத்தாட்டுக் காண்கிறான். இராவணன் போல் சரமாரி அம்பெய்து அவனது தலையற்றுப் போகச்செய்த தலைவன் வரவு எங்கும் காணோம் என்றவாறெல்லாம் எண்ணி ஏங்குகிறாள்.

இவ்வேகத்தால் "வைகுந்தன்" என்பதோர் தோணி பெறாது உழல்கிறாள். எனவே தோணி பெறுவதற்கு ஏதாவது வழி தேடுகிறாள். இன்னடிசிலோடு, பாலமுதூட்டி எடுத்த என் கோலக்கிளியை நயந்த குயிலோடு நட்புக்கொள்ளச் செய்வேன் எனச் செப்புகிறாள்.

உலகளந்த உத்தமன் இன்னும் தன்னை அளக்கவில்லை, அதனால் உறக்கம் வரவில்லை. ஆனால் குயில் மட்டும் அழகான பெடையோடு காவில் கண்படை கொள்கிறது ஏன் எனக் கேட்டாள்.

அவன் கிட்டாமையாலே உறக்கமின்மையாலும், ஏக்கத்தாலும் முத்தன்ன வெண்முறுவலும், செய்ய வாயும், முலையும் நலனழிகிறது. பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப் புணர்வதோர் ஆசைப் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது தன் உள்ளத்தில் காரணம் .....?

"பைங்கிளி வண்ணன் சிரீதரனெப்ப தோர் பாசத்து அகப்பட்டிருந்தேன்" எனக் கூறுகிறாள். அப்பாச வலையினின்றும், தன்னைப் பிரிக்க முடியாத நிலையினைக் குயிலிடம் கூறி, நாராயணன் வரக் கூவுவாய் எனக் கூறுகிறாள்.

இவ்வாறு குயிலிடம் கண்ணனின் வரலாற்றைச் சொல்லியும், குயிலுக்குப் பலவாறு நன்மொழி கூறியும், தன் ஆற்றாமையைக் கூறியும் அதனைத் தூது விடுக்கிறாள். எல்லாம் எட்டெழுத்து மந்திரமாம் நாராயண மந்திரம் மீது அவளுக்கிருந்த அபரிமித பக்திப்பெருக்கே!

நட்சத்திரங்கள்

J. VIJAYARANI
XI - A,
Desiya Girls Higher Sec. School.

பகலில் பகலவன் வெம்மை தாளாமல்
பயந்து தம்மை மறைத்துக் கொண்டு
இரவில் சந்திரன் தண்ணொளியில்
இன்பமாகப் பொழுது போக்க
வானவீதியில் உலாவரும் மின்மினிப் பூச்சிகள்.

With best compliments from:

THE UNITED SCIENTIFIC COMPANY

46, Kuppiah Chetty Street,
WEST MAMBALAM,
MADRAS-33
Phone: 427522

BRANCH:
34, East Hanumantharayan Koil St.,
MADURAI-1
Phone: 27387

FOR
COMPLETE EQUIPMENTS - DESIGNING - FURNISHING
AND
MAINTENANCE OF LABORATORIES OF ALL KINDS
Complete Technical Data furnished for initial and
Recurring Equipments for Higher Secondary,
B. Sc. & M. Sc. Laboratories
AND ALSO FOR
Industrial and Research Laboratories

பள்ளி நூற்றாண்டு விழாவிற்கு எங்கள் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!



180, வடக்குரதவீதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் குருஞானசம்பந்தர் இந்து மேல்நிலைப்பள்ளி "நூற்றாண்டு விழா மலர்" அச்சிடும் வாய்ப்பினை நல்கிய பள்ளி நிர்வாகக் கமிட்டியினர் அனைவருக்கும் எமது உளங்கனிந்த



With best compliments from:

The Ramaraju Surgical Cotton Mills Limited,

RAJAPALAYAM.

(Ramanathapuram District)

Post Box No. 2. *Phone No. 2904* *Grams: "SURGICOM"*

Pioneer Manufacturers of Surgical Dressings in South India

FACTORIES AT:

RAJAPALAYAM AND PERUMALPATTI.

We manufacture Absorbent Cotton Wool
Absorbent Gauze, Bandage Cloth,
Roller Bandages and Plaster of Paris
Powder in strict conformity to B. P. C.
Standards, and I. P. Standards.

While you ask for the best in the market
You are for our "surgicom" products
"Surgicom" is not only in our midst
Also familiar in Arabian Gulf and Far-East


MADRAS DEPOT:

49, Broadway, MADRAS - 600 001. Phone No. 29873.

CHAIRMAN:

SHRI P. R. RAMASUBRAHMANEYA RAJHA, B.Sc.,

பொன்னான நினைவுகள்



T. D. திருமலை,

செயலர்,

காந்தி அமைதி நிலையம், சென்னை.

தனவந்தரும் முக்கியஸ்தருமாகிய என் தகப்பனார் தோத்தாத்ரி தெய்வ நாயகமையங்கார் ஓர் விஜயதசமியன்று, மேளதாளத்துடன் கோலாகலமாக, பயந்து பிரமித்து நின்ற என்னைச் சில குழந்தைகளுடன், குதிரைச் சாரட்டில் ஏற்றி இந்து உயர்நிலைப் பள்ளியில் அரிச்சுவடி கற்பிக்கச் செய்து எல்லோருக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கினார்கள். பின்நான் மிகுந்த திறமைசாலியாக வேண்டும் என்ற பேரவாவால் வீட்டிலேயே தகுந்த ஆசிரியர்களை வைத்து, பாடங்கள், திவ்வியப் பிரபந்தம், வடமொழித் தோத்திரங்கள் கற்க வழி செய்தார்கள். எனக்கு வயது ஏறிற்றே தவிர நினைத்தபடி கல்வியேறவில்லை. மூன்றாவது வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு முடிய பள்ளிக்குப் போய் வந்தேன். மாலையில்தவறாது விளை-யாட்டு மைதானத்திற்கும் போய் விடுவேன்.

அப்பொழுது மூன்றாம் படிவம் தேர்ந்து மேல் வகுப்பிற்கு வருவதே மிகவும் கஷ்டம். ஏனென்றால் அவ்வகுப்பில் கண்டிப்புடன் கற்பிக்கும் திரு M நாராயண ஐயங்கார் திரு P. கோபாலையங்கார் முன் படிக்காது தப்பி விடுவதே மிகவும் கஷ்டம். எப்படியோ கஷ்டப்பட்டு ஐந்தாம் படிவத்தைக் கடந்து விட்டேன்.

இந்நிலையில் என் தகப்பனாரைப் பாளையங்கோட்டைக்கு மாற்றியதால் அர்ச்சவேரியர் உயர் பள்ளியில் ஆறாம் படிவம் படித்தேன். S.S.L C. தேர்வில் தோற்றும் போனேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் வந்து இந்து உயர்நிலைப் பள்ளியில் திரும்பச் சேர்ந்து படித்தேன்.

சிறிது வளர்ந்ததில் படிப்பின் அருமை தெரிந்தது. சிங்கமென கர்ச்சிக்கும் ஹெட்மாஸ்டர் திரு. கிருஷ்ணையங்கார், அமைதியாகவே கற்பிக்கும் திரு. நரசிம்ம ராவ் போன்றவர்கள் ஆர்வத்துடனும், ஆதரவுடனும் கற்பித்த முறைகள் இவ்வளவு நாள் சரியாகப் படிக்காது வீணாக்கினோமே என்று வருந்தி நன்றாகப் படிக்கத் தொடங்கினேன். அப்பொழுது நடந்த கட்டுரைப் போட்டியில் இரண்டு பேர் முதற் பரிசு பெறத் தகுதியானோம். திருவுளச் சீட்டுப் போட்டதில் என் நண்பர் பரிசு பெற்றார். எனக்கும் மகிழ்ச்சியே திரு. கிருஷ்ணையங்கார் திருமலை உனக்கு அதிர்ஷ்டம் இல்லையே என்று சொல்லிவிட்டு அக் கட்டுரையைப் பாராட்டி மாண-

வர்களுக்கு வாசித்துக் காட்டினார். அதுவே என்னுடைய ஊக்கத்தைத்தூண்டியது. அப்பொழுதிருந்த திரு M. நாராயண ஐயங்கார் பூகோளம் கற்பிக்கும் போது நேரிற் காண்பது போல் உலகத்தைச் சுற்றிக் காட்டுவார். ஆசிரியராக இருந்து பின் இராமகிருஷ்ணா மடத்துத் துறவியாகிய திரு. ஸ்ரீநிவாஸாச்சாரியார் விஞ்ஞான பாடத்தைச் சர்க்கரைப் பொங்கலாக உருட்டி ஊட்டுவார். திரு. டி. திருமலை ஐயங்கார் வரலாற்றுப் பாடத்தை கல்வியில் வரும் சரித்திர நாவலோ என்று ஆர்வம் கொள்ளும்படி கோவாவாகக் கொடுப்பார்.

கணிதத்தை ஸ்ரீ ராஜமையங்கார் சாக்லைட்டாக மாற்றித் தருவார். திரு அப்பன் ஸ்ரீநிவாஸாச்சாரியார் பூகோளத்தையும், சரித்திரத்தையும், ஆங்கிலத்-தையும் அறுசுவையுணவாக்கி அன்புடன் பரிமாறுவார். சொந்தப் பேரனைப் போல் அரவணைத்து வடமொழி கற்பிக்கும் அப்பன் தாத்தாச் சாரியாரை நினைக்க ஆனந்தம் பெருகும். நடிக்க வைக்கும் K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஆசிரியராகவே இருந்து நடத்திய நாடகங்களில் நான் பெண் வேடம் தாங்குவேன். அதுவே வகுப்பில் கண்டிக்க வந்த ஆசிரியர் என் முகத்தைப் பார்த்தவுடன் புன்முறுவலுடன் திரும்பி விடுவார். இவர்கள் பெற்ற ஊதியமோ மாசம் பத்தோ, இருபதோ தான் இருக்கும். கொண்டது குறைவு. கொடுத்தது கடல் போன்றது. இத்தகையோரை நினைத்து என் உள்ளம் பூரித்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன்.

முனிவர்கள் கூறிய உழைப்பை மகிழ்ச்சியுடனும் இறைவன் எங்குமுளன் நாமறிந்ததைப் பிறர்க்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமுடன் கல்வித் திட்டம் எவ்வாறாயினும் "கற்றதனாலாய பயன் வாலறிவானை அறிதல்" என்ற எண்ணத்துடன் செயல்பட வேண்டும். செகரெட்டரி திரு. S. திருமலை ஐயங்கார் பொருளாளராகவும், செகரெட்டரியாகவும் இருந்த திரு. T.A. ஸ்ரீநிவாஸாச்சாரியார் துணையாக இருந்து கல்விக் கோயில் கட்டிச் சிறக்கத் தொண்டு செய்ததையும் என் தகப்பனார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நான் T.A. ஸ்ரீநிவாஸ ஐயங்காருடன் அரசியல் காரணமாகப் பழக வாய்ப்பு கிடைத்த போது அவர் நுண்ணறிவை வியப்பேன். அவர் திருமகனார் திரு T.A.S. ராமசாமி அவர்கள் முயற்சியால் நூற்றாண்டு விழாக் காண்கிறது இப்-பள்ளி. இச்சமயம் பெரியமனம் படைத்தோர் கல்லூரியாகவும் பல்கலைக்கழகமாக வும் மேம்படுத்த ஸ்ரீ ஆண்டாள் அருள் செய்வாராக என்று பணிவுடன் வணங்கு-கிறேன். கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழூர், சோதிமணி மாடம் தோன்று-மூர்-நீதியால் நல்ல பத்தர் வாழூர்-வில்லிபுத்தூர் வேதக் கோனூர்.

WITH BEST WISHES

FROM

MADRAS

REFINERIES

LIMITED

MANALI,

MADRAS - 600 068.

With best compliments from:

Mr. Desh Dopli,

POPLI BROS,

SPORTS SPECIALIST,

"We grow as we serve
in service since 1913"

76, 77, West Tower Street,

Madurai - 1.

With best compliments from:

Rohini & Mohini Knitting Co.,

1-A, Kangeyam Cross Road,

TIRUPUR - 638 604.

Agent :-

LAKSHMI AGENCIES,

Sri. S. VAITHILINGAM,

649, Sivagamipuram,

RAJAPALAYAM.

வைணவமும் தமிழும்.

திரு. இரா. தாமரைக்கனி எம்.எல்.ஏ.,
ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி.

நம் தமிழ் நாட்டில் சங்ககாலம் தொட்டுத் தமிழ்மொழி, நமக்குப் பேச்சு வழக்கிற்காக மட்டுமல்லாது, நம்மோடு ஒவ்வொரு நிலையிலும், அதாவது, இலக்கியம், மருத்துவம், கலைகள், வானவியல் ஆகிய பலநிலைகளிலும், பயன் பட்டு வரும் மொழியாகும். ஏனைய நாடுகளிலெல்லாம் நாகரிகம் வளர்வதற்கு முன்பாகவே, தமிழன் தன் மொழியால் அனைத்து நிலையிலும் மேம்பட்டு விளங்கினான். இவ்வாறு கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடிமகனான தமிழனது தமிழைச் சங்கம் மருவிய சான்றோர்களேயல்லாது சமயநெறி பேணிய சான்றோரும் வளர்த்துப் பெருமைப் படுத்தினர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே அதாவது கடைச் சங்க இறுதியிலே, அருகம், பௌத்தம், வைணவம், சைவம் முதலிய பல சமயங்களைச் சார்ந்த-வர்கள் புலவர் பெருமக்களாகச் சங்கம் வீற்றிருந்து தமிழாய்ந்தனர், என்ற செய்தியைக் கடைச் சங்கத் தொகை நூல்கள், பத்துப்பாட்டு முதலிய இலக்கி-யங்களாலும், சிலம்பு, மணிமேகலை முதலான காவியங்களாலும் அறிய முடிகிறது. பின்பு, ஒவ்வொரு கால நிலையில் ஒவ்வொரு சமயம் தலை நிமிர்ந்து நின்று, மொழியால் சமயமும், சமயத்தால் மொழியுமாக இணைபிரியா நிலையில் வளர்ந்-தமைக்குச் சரித்திரமே சான்று பகரும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப்பின் வைணவ சமயத்தின் மறுமலர்ச்சியாக ஆழ்வார்களின் பிறப்புக்களையும் வைணவ சமயாச்சாரியராய இராமானுசாச்சாரி-யாரையும், இன்னும் பல சமயவல்லுனர்களையும் காணமுடிகிறது. இவர் அனை-வரும் இறைவனை அடையத் தமிழையே பயன்படுத்தினர். அதன் விளைவு தான் இவர்கள் இயற்றிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்று போற்றப்படும் நூலாகும். ஆழ்வார்கள் அனைவரும் வெவ்வேறு குலத்தினர். ஆழ்வார்களில் தலையாயவராகக் கருதப்படும் நம்மாழ்வார் காரிமாறன் சடகோபன் என்றே போற்றப்படுகிறார். இவர் குலத்தால் அந்தணர் அல்லர். ஆழ்வார்களில் வேறு சிலரை மலர்களிலும், குளத்திலும் தோன்றியவர்களாகவும், சிலரை அந்தணர் குடியிற் பிறந்தவராகவும், திருப்பாணாழ்வார் என்பவரைப் பாணர் குடியில் வளர்ந்தவராகவும், திருமங்கை மன்னன் என்பவரைக் கள்ளர் குடியில் பிறந்த வராகவும் வரலாறு கூறுகிறது. எங்கு-எக்குடியிற் பிறந்தாலும் பக்தியொன்றால் அனைவரும் ஒருகுலத்தவரேயாவார்கள் என்ற கருத்து,

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து, எத்தனை
நலம்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்,
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காள் என்றுஉள்–
கலந்தார் அடியார்தம் அடியார் எம்மடிகளே"

என்ற திருவாய்மொழியாலும்,

"பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத் தவர்களேலும், எம்மடி யார்களாகில்
தொழுமின்! நீர்,கொடுமின்! கொண்மின்! என்று நின்னோடும்ஒக்க
வழிபட அருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே!" என்றும்

"அமர வோரங்கமாறும் வேதம் ஓர் நான்கும் ஓதித்
தமர்களில் தலைவராய சாதியந்தணர் களேலும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்ப தோரளவில் ஆங்கே
அவர்கள் தாம் புலையர் போலும் அரங்கமா நகருளானே" என்றும்

திருமாலைப் பாடல்களாலும் வலியுறுத்தப்படுவதோடு, அடியார்களைச் சாதியை யிட்டுப் பழித்தல் கூடாது என்பது கூறப்படுகிறது. இதற்கு ஆழ்வார்களுடை–யவும், வைணவ சமயாச் சாரியர்களுடையவும் வரலாற்றில் நிறையவே சான்று கள் உண்டு. குறிப்பாக சமயத்தலைவர் என்று போற்றப்படும் இராமாநுசர், தன் ஆசிரியனிடத்தில், அவர் பரமரகசியம் என்று கூறிய மெய்ம்மைப் பொருளை, ஆசிரியரின் ஆணையை மீறுவதால் தனக்கு நரகமே கிடைப்பதானாலும் அதனை யும் பொருட்படுத்தாது, மண்ணுலக மாந்தர் தம் உய்வு கருதி, எல்லோரும் நற்கதி பெறட்டும் என்ற நல்லகருத்துடன் வேற்றுமை பாராது திருக்கோட்டியூர்க் கோபுரத்தின் மீதேறி ஆசையுடையோர்க்கெல்லாம் கூறுமின் பின்னானார்க்கும் கட்டளையிட்டுப் பேசி வரம்பறுத்துத் திருமந்திரத்தை உணர்த்தினார், என்று வரலாறு கூறுகிறது. இவற்றால் வைணவம் சாதி வேறுபாட்டைக் கருதவில்லை. பக்திமையொன்றையே தலைசிறந்ததாக கருதுகிறது என்பதை அறியமுடிகிறது.

தமிழ் வளர்த்தமை

ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் என்று போற்றப்படுபவரில் ஒருவர் "நற்றமிழன் நல்லேன் நான்" என்று கூறுகின்றார். ஆண்டாள் தன் பாவைப் பாடலைச் "சங்கத்தமிழ் முப்பதும்" என்கிறாள். ஆக இவர்கள் பாடல்களெல்லாம் சங்கத் தமிழ்போலும் சாலச் சிறந்தது என்பது தெரிகிறது. நம்மாழ்வாரின் திருவாய்மொழி சங்கமேறியதாகவும் ஆழ்வார் பாடற் சிறப்பைச் சங்கப்புலவர்கள் போற்றியதாகவும் வரலாறு ஒன்று உள்ளது. அவ்வரலாற்றில், இடைக்காடர், வள்ளுவர், ஔவையார் போன்றவர்கள் சிறப்பித்துப் பாடியதாகவும் உள்ளது. அவற்றில்

"குறுமுனிவன் முத்தமிழும், என்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று வள்ளுவர் பாடிய

தாகப் பாடலொன்று காணப்படுகிறது. இந்த வரலாறு கற்பனையாஉண்மையா

என்று கால ஆராய்ச்சி செய்வது வேறு. எதுவாயினும் புலவர் பெருமக்களின் சிறப்புப் பெற்ற பிரபந்தங்கள் என்றே கொள்ளவேணும்.

இந்தத் திருவாய்மொழியின் உரையான ஈட்டில் உள்ளதாக ஒருசிறு நிகழ்ச்சி கூறப்படுகிறது. இறைவன் எம்மொழியிற் கூறினாலும் கூறுபவன் உள்ளக்கிடக்கையை அறிகிறான் என்ற கருத்தை விளக்க வல்லதாக உள்ளது. இராமாநுசர் என்ற ஆச்சாரியர் திருவரங்கத்தில் வாழ்ந்த காலத்தில் கோவிலுக்கு யார் போய்விட்டு வந்தாலும் கோயிலில் என்ன விசேடம் என்று கேட்பதுண்டாம். அதுபோல் அவர் சீடர்கள் ஒரு நாள் கோயிலுக்குப் போய்விட்டு வந்தபொழுது எப்பொழுதும்போல் என்ன விசேடம் என்றாராம். அதற்கு அவர்கள் இன்று கொள்ளிடத்தின் அக்கரையிலிருந்து பால், தயிர், நெய் விற்கவரும் ஆய்ச்சியர் (விற்கப்போகுமுன் இறைவன் திருமுன்பே வைத்து அவனுக்கு அர்ப்பணித்தே விற்கப்போவதாக வழக்கமாம்) அவற்றை கோயில் வாயிலில் வைத்து, இறைவனை நோக்கிப், பாலுண்பீர்! தயிர் உண்பீர்! நெய் உண்பீர்! என்று கூறினார்கள். நாங்கள் அவர்களிடம் இப்படித் தமிழில் கூறலாகாது. வடமொழியிற் கூற வேண்டுமென்று கூறினோம் என்று கூறினார்கள். இதனைக்கேட்ட இராமாநுசர் தன் சீடர்களிடம், அட அசடுகளா! உங்கள் முரட்டு ஸம்ஸ்கிருதத்தை அவர்களிடமா காட்டினீர்கள். அழகு தமிழில் கூறினால் அரங்கன் அறியானா? என்று கடிந்து கொண்டதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இதனால் அவரவர்க்கேற்ப எந்த மொழியிலாயினும் பக்திரசம் செறிந்தால்போதும் என்பதுதானே தேறி நிற்கின்றது.

மேலும் நல்ல தமிழ்ச்சொல்லை ஆழ்வார்கள் ஆண்டாள் பாக்குகளில் அறியலாம். ராமன் என்ற வடசொல்லை ஆண்டாள் ஒருத்தி தான் 'மனத்துக்கு இனியான்' என்று அழகுதமிழில் கூறுகிறாள். நிற்க, ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் கச்சங்கம் என்றதொரு சொல் காணப்படுகிறது. அகராதி (Laxicon) தொகுத்த பல்கலைக்கழகத்தினர் இச்சொல்லிற்குப் பொருளை மட்டும்கூறிச் சொல்லாட்சிக்கு வேறு இடமே இல்லாமல் இந்த நாச்சியார் திருமொழியையே மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். இப்படி அருமையான தமிழை வளர்த்தவர்கள் வைணவர்கள். மேலும் சாதி வேறுபாடுகளிதாதவர்களும் கூட. இத்தகைய அருமையான மதத்தின் தலைவியாகப் போற்றித் துதிக்கும் ஆண்டாள் பிறந்த இந்த வில்லிபுத்தூரில் உள்ள இந்துப்பள்ளியும் நற்றமிழையும், நல்ல கல்வியையும் இனப்பாகுபாடு இல்லாது கற்பித்து இன்றுபோல் என்றும் பல்லாயிரம் ஆண்டுகள் நற்பணிசெய்யட்டும்.



ஸ்தாபிதம்: 1977

RA 240, Gurugnanasambandar Hindu Higher Secondary School Students Co-operative Stores Ltd.,

SRIVILLIPUTTUR.

நூற்றுண்டுவிழா கொண்டாடும் எங்கள் இந்து உயர் நிலைப்பள்ளி நிர்வாகத்திற்கு எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

எங்கள், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலையில், மாணவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான குறிப்பு ஏடுகளையும், எழுதுபொருட்களையும், துணி வகைகளையும் நியாயமான விலையில் விற்பனை செய்கிறோம். மேலும் எங்கள் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளிச்சிப்பந்திகள் முதலியவர்களுக்கு வேண்டிய பொருள்களையும் வாங்கி நியாயமான விலையில் விநியோகம் செய்கிறோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

S. R. Shanmugasundaram
B.Com., T.T.D.,
Secretary

R. Parthasarathy
S. Govindan *B.Sc., B.T.,*
N. Thirumalai
Directors

S. Ananthanarayanan
B.A., B.Sc., B.T.,
Ex Officio President

100 ஆண்டுகள் காணும் பள்ளியில், 12 ஆண்டுகள் தாளாளராகப் பணிபுரிந்த S. திருமலை அய்யங்கார் B.A.,B.L., அவர்களது வரலாறு.

A. C. ஸ்ரீநிவாஸன்,
கூட்டுறவு சார்பதிவாளர்.

நூறு ஆண்டுகளுக்குமுன் கல்வி கற்க பள்ளி கிடையாது. இருந்த வசதியோ சிறிது. ஆர்வமிக்கப் பெரியவர்களான திரு. சேதுராவ், திரு. ராமராவ் ஆகியோரது அயராத முயற்சியால் 1882ம் ஆண்டு இப்பள்ளி உதயமானது.

இப்பள்ளியில் 1916வது ஆண்டுமுதல் 1919ம் ஆண்டுவரையிலும், 1928ம் ஆண்டுமுதல் 1937ம் ஆண்டுவரையிலுமான காலங்களில் பள்ளியின் தாளாளராக சீரிய பணிபுரிந்து அளப்பறிய காரியங்களைச் செய்த திரு. S. திருமலை அய்யங்கார் அவர்கள் கல்வி கற்கவே மிகுந்த கஷ்டப்பட்டவர்.

கல்விகற்கவேண்டுமென்ற ஆவல் ஒருபுறம். வசதியோ கிடையாது. அவர் கல்வி கற்ற காலத்தில் உயர்நிலைப்பள்ளி ஸ்ரீவில்லிபுத்தூரிலோ, அதற்கு அருகிலோ கிடையாது. விருதுநகரில் மட்டுமே இருந்தது. விருதுநகரில் தங்கிப் படிக்க வசதி கிடையாது. எனவே ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சரக்குகள் ஏற்றிப் போகும் கட்டை மாட்டுவண்டியில் கட்டுச்சோற்றை இரண்டு மூன்று தினங்களுக்குச் சேர்த்துக் கட்டிக்கொண்டு சென்று படித்தார். படிப்பின்மேல் உள்ள ஆவல் அவரது கஷ்டங்களைச் சிரமங்களை துச்சமாக எண்ணினார்.

பள்ளி இறுதிப்படிப்பு முடித்தவுடன் விருதுநகரில் ஆசிரியப்பணி தொடர்ந்தார். மேலும் கற்கவேண்டுமென்ற ஆவல் தணியாத தாகமாக அவருக்கு இருந்தது. எனவே சென்னை சென்று பணிபுரிந்துகொண்டே பி.ஏ., பட்டமும் பி.எல்., பட்டமும் பெற்றார்.

பின்பு சேத்தூர் ஜமீன்தாரிடம் அவரது அரசவை சட்ட ஆலோசகராக இருந்தார். அக்காலத்தில், தான் கல்வி கற்க தான் பட்ட கஷ்டங்களை எண்ணிப் பார்த்து தனது வாழ்நாளில் கல்விப்பணிக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டுமென்று எண்ணி, இந்து உயர்நிலைப்பள்ளிக் கமிட்டியின் செயலாளராக 1916வது வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் செயலாளராக இருந்த காலத்தில்தான் தற்போது தேசியப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இருக்கும் கட்டிடத்தை உள்ளூர் மக்களின் ஆதரவினால் நன்கொடைகள் வசூலித்து ரூபாய் பதினையாயிரம் செலவில் கட்டிமுடித்தார்கள். தற்போது ரூபாய் பதினைந்து லட்சமானாலும் கட்டமுடியாத கட்டிடமாய்த் திகழ்கிறது.

இவருக்குப்பின் காரியதரிசியாக வந்த உயர்திரு. T. A. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களது பணிக்காலத்தில் அருகாமையில் பெரிய கட்டிடம் உருவாக இடம் வாங்கினார்கள்.

இப்பள்ளியை 1882ம் ஆண்டு ஆரம்பித்த பெரியோர்களிலிருந்து 1970ம் ஆண்டுவரை தலைவர்களாகவும், செயலாளர்களாகவும் இருந்த பெரியோர்களது கனவுகளை நினைவாக்கும்முகத்தான் உயர்நிலைப்பள்ளியாக இருந்த இப்பள்ளியையும், தேசியப்பெண்கள் உயர்நிலைப்பள்ளியையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்திக்கொண்டுவந்த பெருமை தற்போதைய தாளாளர் உயர்திரு. T. A. S. ராமஸ்வாமி B.Sc., அவர்களைச் சாரும். அவர்கள் தன்னுடைய முழு முயற்சியால் இப்பள்ளிக்குச் சிறந்த பெரிய கட்டிடம் ஒன்று கட்டவேண்டும் என்றும், நிரந்தரமான பணவசதி ஏற்படுத்தவேண்டுமென்றும் எண்ணி தன்னைப்போன்ற பள்ளியின் பழைய மாணவர்களையும், பெற்றோர்களையும் நன்கொடைகள் வேண்டுகிறார். நாமும் நம்மால் இயன்ற பொருளுதவி கொடுத்து நம் பெரியோர்கள் கண்ட கனவுகளையும், இன்றைய செயலாளரின் எண்ணங்களையும் நிறைவேற்றுவோமாக!

திரு. T. A. S. ராமஸ்வாமி அவர்கள் தாளாளராக இருக்கும் இப்பொன்னான காலத்தில் இப்பள்ளி நூற்றாண்டு விழாக் காணும் பாக்யம் பெற்றுள்ளது.

வாழ்க நல்லுள்ளம் படைத்த நன்மக்கள்
வளர்க பள்ளி மேன்மேலும்!



WITH COMPLIMENTS

FROM

SOUTHERN ASBESTOS CEMENT LIMITED,

CHORDIA MANSION, III FLOOR,

739, ANNA SALAI,

MADRAS - 600002.



Manufacturers of

"RAMCO" Asbestos Cement, Roofing Sheets,

Flat Sheets, Accessories, Gutters,

Fittings, etc.,



Registered Office:

" Ramamandiram "

RAJAPALAYAM

Factories:

ARKONAM (Tamil Nadu)

KARUR (Karnataka)

With best compliments from :


M/s. INDO FAB,

D 31 & 32 DEVELOPED PLOT,

THUVAKUDI.

Tiruchy - 15.

With best compliments from



KRISHNAVENI TRANSPORT,

147-A, SOUTH MASI STREET,

MADURAI - 625 001.

சொந்த வீடு பெறவேண்டுமெனில் ...

V. காந்திமதிநாதன்,
(பழைய மாணவர்)

உலகில் எந்த மனிதனுக்கும் தானும் தன் குடும்பத்தாரும் நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு சொந்த வீடு வேண்டும் என விரும்புவது இயற்கை.

ஆனல் தற்போதைய ஜன நெருக்கத்தினலும் உயர்ந்து கொண்டே செல்லும் விலைவாசிகளாலும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த நபர்களுக்குச் சொந்த வீடு வேண்டும் என்ற விருப்பம் மனத்தளவில் உருவானவுடன் அதைச் செயல் படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு கட்டிட சம்பந்தமான வரைபடங்களைத் தீவிரமாகப் பார்ப்பதும், கட்டுமானம் நடக்கும் இடங்களில் மிகவும் நிதானமாகக் கவனிப்பதுடன் பொருட்காட்சிகளில் "குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன்" ஏற்படுத்தப்பட்டுள்ள வீடுகளையும் தமக்கு இது போன்ற ஒன்று கட்ட சாத்தியமா என்றும் எண்ணுகின்றனர்.

சொந்த வீடு வேண்டும் என்ற ஆசையினல் பலர் சில சாமர்த்தியசாலிகளிடம் பணத்தை இழந்துவிட்டு அவதிப்படுகின்றனர்.

அப்படி அவதிப்படாமல் சொந்த வீடு கட்டிக்கொள்ள விரும்பும் அன்பர்களுக்கு ஒரு யோசனை.

முதலாவதாக சொந்த வீடு கட்டிக் கொள்ள வசதியான ஒரு கட்டிட மனை வேண்டும். மனையைக் கிரையம் பெறும் முன்பாக ஷி இடம் பஞ்சாயத்து யூனியனின் பகுதியா அல்லது நகராட்சி எல்லைக்குட்பட்டதா, நகரமைப்புத் திட்டப்பகுதி என்றல் குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட பகுதியா என்பதை சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் தெரிந்து கொள்ள வேண்டும். புதிய விஸ்தரிப்புப் பகுதியாக இருந்தால் அதற்கு ரோடுவசதி மற்றும் பொது உபயோகத்திற்கான இடங்கள் முதலியன ஒதுக்கப் பெற்று மனைப்பிரிவுகள் உரிய அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப் பெற்றிருக்கிறதா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனைப் பிரிவு ஒப்புதல் அளிக்கப்படாத மனைகளில் அல்லது முறையாத உட்பிரிவு செய்யப்படாத மனைகளில் உரிய அதிகாரிகளிடம் கட்டிட வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரமும் அனுமதியும் பெற்றுக் கொள்ளாமல் கட்டிட வேலையைத் துவங்கினல் பல அவதிக்கு ஆளாவதுடன் சொந்த வீட்டில் குடியேறும் திட்டமும் தாமதப்படலாம்.

திட்டமிடப்படாத விஸ்தரிப்புப் பகுதிகளாக இருந்தால் குறைந்த பட்சமாக 60'×40' அல்லது 70'×33' அளவில் மனைகள் இருந்தால் ஓரளவிற்கு வசதியாக வீடு கட்ட முடியும்.

அடுத்து கிரையம் வாங்க உத்தேசிக்கும் கட்டிடமனைக்கு வில்லங்கம் ஏதேனும் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதுடன் விற்பனை செய்பவரின் மூலபத்திரங்கள் மற்றும் உரிமைபற்றி வக்கீல் ஒருவரிடம் ஆலோசனை பெற்றுக் கொண்டு கிரையப் பத்திரம் எழுதி பத்திரத்தை உரிய கட்டணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இனி தகுதியான ஒரு கட்டிடப் பொறியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத் தயாரிப்பாளரை அணுகி நமது சௌகரியத்திற்குத் தகுந்தவாறு (ஆனால் சென்னை நகராட்சிகளின் கட்டிடவிதி, திட்டவிதிகள் முதலியவைகளை அனுசரித்து) திட்டமிட்டு வரைபடம் தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சமர்ப்பித்து முறையான அனுமதியும் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாநகராட்சி, நகராட்சி மற்றும் பஞ்சாயத்துக் கட்டிட விதிகள் ஆகியவை மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு வழி வகுப்பதற்குதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாகக் கட்டிடம் கட்டும் மனுதாரர்களுக்கு உபத்திரவம் கொடுப்பதற்காக இல்லை.

கட்டிடம் கட்டுவதற்குக் கடன் உதவி தேவையானால் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் மதிப்பீடு, மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்துக் கடன் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டிடம் கட்டும் போதும் கூடியவரை ஒப்புதல் பெற்ற வரைபடத்திலிருந்து மாற்றம் ஏதுமின்றி கட்டிட விதிகளை அனுசரித்து வேலை செய்தால் திருந்திய வரைபடம், மேல் முறையீடு போன்ற தேவையற்ற வேலைகளையும் செலவுகளையும் தவிர்த்து விரைவில் கட்டிட வேலையை முடித்துச் சொந்த வீட்டில் குடியேறி நிம்மதியாக வாழலாம்.



With the best compliments of:-

MADRAS CEMENT LTD.,

Manufacturers of the famous

RAMCO BRAND CEMENT

Regd. Office :
'Ramamandiram'
RAJAPALAYAM.
Pin - 626 117.

Factory :
Ramasamyraja Nagar,
TULUKKAPATTI R. S.
Pin - 626 204. (Tamil Nadu)

நூற்றாண்டு விழாவிற்கு நல்வாழ்த்துக்கள்!

ரத்னபாலா

பாலர் வண்ண மாத மலர்.

- சிறுகதைகள்
- அறிவுக்கதைகள்
- நீதிக்கதைகள்
- குட்டிக்கதைகள்
- மாயாஜாலக் கதைகள்
- பஞ்சதந்திரக் கதைகள்

மற்றும்

பொதுஅறிவு - மதம் ஆகியவற்றுடன்
சித்திரக் கதையும் கொண்ட
ஒரே சிறுவர் பத்திரிகை.

ஆண்டுச் சந்தா ரூ. 21—00 * தனி இதழ் ரூ. 1—75

ரத்னபாலா,

த. பெ. எண். 17, **சிவகாசி - 626123.**

பாரதியின் புதுமைப் பெண்.

திருமதி **L. சென்பகம்** B.A.,B.T.,
தலைமை ஆசிரியை,
தேசீயப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

(இக்கட்டுரையின் தலைப்பு வாசகர்களுக்குப் புதுமையான தொன்றன்று. இது போன்ற தலைப்பில் பலக் கட்டுரைகளை நேயர்கள் வாசித்திருப்பார்கள். இருப்பினும் பாரதியின் புதுமைப்பெண்ணை பலர் பலவேறுகோணங்களில் நின்று கண்டிருக்கிறார்கள். நானும் ஒரு கோணத்தில் நின்று பார்த்து நான் கண்ட ஒளிவடிவக் காட்சிக்கு நான் தந்த வரிவடிவம்தான் இக் கட்டுரை.)

அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியார் நம் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் தமிழக மக்கள் ஏனைய இந்தியப் பெருநில மக்களோடு ஒருமைப்பட்ட உணர்வு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உள்ளங்களில் விடுதலை வேட்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது; சுதந்திரக் கனலோ பெரும் காட்டுத்தீ போன்று பரவிக் கொண்டிருந்தது. மக்கள் அடிமைத் தளையில் சிக்குண்டு நிலை தடுமாறிக் கொண்டிருந்தார்கள்; அறியாமை எனும் சேற்றில் உழன்று கொண்டிருந்தார்கள். அமரகவியின் காலத்துப் பாரத மக்களின் அவல நிலையைக் கவிஞர் பெருமான் நொண்டிச்சிந்தாகப் பாடிய 'நெஞ்சு பொறுக்கு திலையே' என்று தொடங்கும் பாடலில் மிக விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நெஞ்சு பொறுக்கு திலையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் — இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார் — இந்த
மரத்திலென் பார்; அந்தக் குளத்திலென்பார்,
துஞ்சுது முகட்டி லென்பார் — மிகத்
துயர்ப்படு வார்எண்ணிப் பயப்படுவார்.

என்ற பாடல் அன்றைய பாரதத்தின் ஆண் — பெண் இருபாலாரின் கோழைத் தன்மையைச் சுட்டிக் காட்டுவதாய் அமைந்தது. கோழைகள் நிறைந்த நாட்டில் எத்துணைதான் விடுதலை வேட்கை யிருந்தாலும் அங்கே வீரம் பிறக்காதல்லவா? ஒரு நாட்டு மக்கள் வீரம் உள்ளவர்களாக வளர்ந்தோங்க வேண்டு மென்றுல் சிவாஜிக்கு ஒரு ஜீஜிபாய் அன்னையாக அவதரித்தமாதிரி ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் பெற்றெடுத்த தாய் வீரம் நிறைந்த உள்ளத்தைக் கொண்டவளாக விளங்க வேண்டும்; வீரமுள்ள பெண்கள் வாழும் மனித சமுதாயம் எட்டுதிக்கும்

வீர முரசு கொட்டி வெற்றி வாகை சூடியே பவனி வரும். அத்தகைய மாட்சிமை பெற்ற பாரத சமுதாயத்தையே

ஒளிபடைத்த கண்ணினுய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினுய் வா வா வா
களிபடைத்த மொழியினுய் வா வா வா
கடுமைகொண்ட தோளினுய் வா வா வா
தெளிவுபெற்ற மதியினுய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினுய் வா வா வா

என்ற வீர உரைகளால் நல்வரவேற்பு நல்குகின்ருர். எனவே, பாரதி கண்ட புதுமைப்பெண் வீரம் கொண்டவளாய் விடுதலே வேட்கை மிகுந்தவளாய் மூடப் பழக்க வழக்கங்களின் பிடியினின்றும் விடுபட்டு நல்லறிவும் ஞானமும் கொண்ட வளாய் விளங்குகின்ருள்.

மேலும், பாரதி காலத்துப் பெண்கள் அடிமைகளேப் போன்று நடத்தப் பட்டார்கள். 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பேதுக்கடி' என்று பொதுவாக மக்கள் கூறிவந்த அந்தக் காலத்தில் பாரதியோ தமது பாடல்களின் தொகுப்பி லுள்ள 'பாரதி—அறுபத்தாறு' என்ற பகுதியில் சேர்க்கப்பட்ட 'பெண் விடுதலே' என்ற தலேப்பில் அவர் பாடியுள்ள சில அடிகள் நம்மொவ்வொருவருடைய உள்ளத்தினேயும் தாக்கும் கணேகள் போன்று கூரிய சொற்களால் ஆனவை என்பதை நாம் மறப்பதற்கில்லே. பெண்களின் விடுதலேயை விரும்பிய பாரதி

'பெண்ணுக்கு விடுதலேயென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்!
மண்ணுக்குள் ளெவ்வுயிருந் தெய்வ மென்ருல்,
மனேயாளுந் தெய்வமன்ருே? மதிகெட் டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்,
விடுதலேயென் பீர்கருணே வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலேநீ ரில்லே யென்ருல்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை இல்லே'

என்று பெண்ணடிமையைச் சாடுகின்றதைப் பார்க்கின்ருேம்.

'பெண்டாட்டி தனேயடிமைப் படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?'

என்ற கேள்விக் கணேயைத் தொடுக்கும் பாரதியார்

'.....பெண்மை யடிமை யுற்ருல்
மக்களெலா மடிமையுறல் வியப்பொன்ருமோ?'

என்று பாரத மக்கள் அடிமைகளாக அந்நியனுடைய ஆட்சியில் வாழ்வதற்கு

பாரத நாட்டின் பெண்ணடிமையே காரணம் என்ற பெரும் உண்மை எடுத்துக் கூறும் பாரதியின் அறிவாற்றல் என்னே! என்னே!! தாய்மை மாண்பு கொண்ட பெண்ணை அடிமையாக்கி அவல நிலையிற்கொண்டு தள்ளுதல் பெரும் தவறு என்பதைப் பாரதியார் தமது பாடல்களில் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இல் வாழ்க்கையில் ஈடுபட்ட ஆண்-பெண் இருவருள் ஒரு ஆண் மகனை விட ஒரு பெண்மகளுக்கே குடும்பப் பொறுப்புகள் அதிகம் என்பதைப் பாரதியார் தமது 'முரசு' பாட்டில் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார்.

'ஒற்றைக் குடும்பந் தனில் — பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே — மனை
வாழ்ந்திடச் செய்பவ ளன்னை'

பொருள் சேர்க்கும் தந்தையின் கடமைப்பாட்டைவிடப் புகழ் சேர்க்கும் தாயின் கடமையே சிறப்புடையது என்று பாரதியார் தம் காலச் சிறுவருக்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் எடுத்துக் காட்டிச் சென்றார்.

பாரதி கண்ட புதுமைப் பெண் ஞானமிக்கவளாய் நல்லறிவு பெற்றவளாய் பேதமைத் தன்மையற்றவளாய் இருப்பாள். 'வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே' என்று தொடங்கும் அதே முரசு பாட்டில்

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி
பேணி வளர்த்திடு மீசன்;
மண்ணுக்குள் ளேசில மூடர் — நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்

என்று ஆண்டு தோறும் 'காயத்ரி ஜெபம்' அன்று நாம் வணங்கும் பெண் தெய்வமாகிய காயத்ரி தேவி ஞானத்தின் அதிதேவதை என்பதை நமக்கு நினைவூட்டுகிற பாரதி 'மண்ணுலகில் சில அறிவீனர்கள் பெண்களின் அறிவினையேக் கெடச் செய்கின்றார்கள்' என்று குத்திக் காட்டுகிறார்.

நாம் உலகத்துப் பொருட்களைக் காண்பதற்கென்றே இறைவன் நமக்குத் தந்த இரண்டு கண்களில் ஒன்றைக் குத்திப் பார்வையே இழக்க எவன்தான் இசைவான்? அது போன்று 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டிய இந்த நாட்டில்'

கண்க ளிரண்டினி லொன்றைக் — குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால் — வையம்
பேதமை யற்றிடுங் காணீர்

என்று பாரத சமுதாயத்தின் அறியாமையை அகற்ற அகவிருளகற்றி அறிவொளி வீசச் செய்ய 'பெண் கல்வி' மிகவும் அவசியம் என்பதை நமது அமரகவி சூசகமாகக் கூறியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துவதன்றோ?

'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்று சொல்வது போல் பெண்கள் பெறும் கல்வி பழுதுற்றதாக இல்லாமல் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்பதே பாரதியின் விருப்பம். நிறைந்த கல்வியும் ஞானமும் பெற்ற பாரதியின் புதுமைப் பெண்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலியின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டீரோ!

'பெண்களுக்குரிய 'அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு' இவற்றை விடுத்து நிமிர்ந்த நடைநடந்து, நேரிய பார்வை கொண்டு, யாரையும் கண்டு அச்சம் கொள்ளாத அளவிற்கு நன்னெறி முறைகளை வகுத்துக் கொண்டு, நிறைந்த ஞானத்தால் ஏற்படும் பெருமித உணர்வு கொண்டு செம்மாந்த வாழ்வினின்று மாறுபடாத புதுமைப் பெண்டிர் பெரும் இருளாகிய அறியாமை யென்னும் சேற்றில் அமிழ்ந்து பொலிவிழந்து அவல நிலையடைந்து வாழும் வாழ்வை உதறித் தள்ளுதலே பெண்ணறமாகும்' என்று பாரதி பெண்ணறத்திற்குப் புதுமையான இலக்கணம் வகுத்துத் தருவதை நாம் காண்கின்றோம்.

அறிவு, ஆற்றல், வீரம், காதல், நேர்மை—அத்துணை நற்பண்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஒருபுதுமைப் பெண்ணை பாரதியார் தமது ஒரே காவியமான 'பாஞ்சாலி சபதத்தில்' திரௌபதியை வர்ணித்திருப்பதை நாம் கண் கூடாகக் காணலாம். துரியோதனனின் ஆணைக்கிணங்க திரௌபதியை கௌரவர் களின் அரசவைக்கு அழைத்துச் செல்ல வந்த தேர்ப்பாகனைக் கண்டு

'நாயகர் தாந்தம்மைத் தோற்றபின் — என்னை
நல்கு முரிமை அவர்க்கில்லை — புலைத்
தாயத்தி லேவிலைப் பட்டபின், — என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றுவிட்டார்? அவர்
தாயத்தி லேவிலைப் பட்டவர்; — புவி
தாங்குந் துருபதன் கன்னிநான் — நிலை
சாயப் புலைத்தொண்டு சார்ந்திட்டால், — பின்பு
தார முடமை யவர்க்குண்டோ!

என்று கூரிய ஈட்டி கொண்டு எய்வது போன்ற கேள்விக்கணைத் தொடுத்தார். அவ்வளவுதான்! அத்தேர்ப்பாகன் திரௌபதியின் கேள்விக்கு விடைகாண முடியாது தான் தலையைப் பிய்த்துக் கொண்டு கௌரவர் சபைக்கு ஓடியே விட்டான். ஈண்டு திரௌபதியின் அறிவு, ஆற்றல், வீரம், சுதந்திரவேட்கை, நேரிய உள்ளம் அத்தனையும் தொழிற்படுவதை இவ்வடிகளில் நாம் காணலாம்.

இப்படிப்பட்ட புதுமைப்பெண்கள் பல்லாயிரம் பலகோடித் தோன்ற வேண்டிய நம்நாட்டில் பெண்ணைக் கலைப் பொருளாகவும் விலைப் பொருளாகவும் ஆக்கிப் பெண்ணினத்தை நலிவுறச் செய்யும் நாகரிகமற்றவர்களைக் கண்டு நாம் என்ன செய்வது? 'மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமையைக் கொளுத்துவோம்' என்று நூற்றாண்டு விழாவினைக் கண்ட பாரதியாரின் அனல் தெறிக்கும் சொற் களை ஈண்டு நினைவுறுத்தி அவருக்கு அஞ்சலி செய்வதைத் தவிர வேறென்றும் யாமறியோம்!

—◎—

நாற்றுண்டு விழாக் கொண்டாடும் பள்ளிக்கு



எங்கள் நல்வாழ்த்துக்கள்!

"லதா ஜுவல்லர்ஸ்"

M. V. பாஸ்கர நாடார்,

நகை வியாபாரம்,

104, தெற்காவணிமூலவீதி,

மதுரை.

With best compliments from:

Sri Murugan Eriporul Angadi,

LECO & CHARCOAL MERCHANTS.

Authorished Distributors For Neyveli "LECO"

27, East Annathoppu Street, MADURAI - 625 001

H. O. 4-A, Simmakkal 3rd St., MADURAI - 625 001

Proprietor:

K. SELVARAJ. Phone: 26411

With best compliments from:

KUMAR SPORTS EMPORIUM,

Always Supplies: Quality Sports Goods at Reasonable Rates,

Stockists for: NIVIALETER BALLS, RAJA BADMINTON RACKETS & TOURNAMENT SPECIAL NETS.

CONTACT:

KUMAR SPORTS EMPORIUM,
120, Jeyalakshmi Vilas,
K. R. Nagar, P. O.
RAJAPALAYAM.

BRANCH:
122-Q, Nadar Market,
(Oppo) Bus Stand,
RAJAPALAYAM.

With best compliments from:

JAGASELVAN & CO.,

PUBLISHERS,

162, West Bouleward Road,

TRICHIRAPALLI - 2.

With best compliments from:

V. P. KONDAL RAJU,

LECO, CHARCOAL DEALERS,

10, Petchiamman Padithurai Road,

Tamil Sangam Road,

MADURAI - 625001. Phone: 25248

பள்ளிகளில் கட்டாய உடற்கல்வி.

N. திருமலை,
உடற்கல்வி ஆசிரியர்,
குருஞானசம்பந்தர் இந்து மேல்நிலைப்பள்ளி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

1975ம் ஆண்டிலிருந்து இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் எல்லா உயர் நிலை, நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வியானது தமிழக அரசினால் கட்டாயப் பாட மாகவும், தேர்வுப்பாடமாகவும் கொண்டுவரப்பட்டது.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால் உடற்கல்வி ஆசிரியர் கழகக் கூட்டத்தில் பேசிய ஒரு பெரியவர், தான் கல்வி கற்ற காலத்தில் உடற்கல்வி வகுப்புகளுக்கோ, விளையாட்டு மைதானத்திற்கோ சென்றது கிடையாது. ஆனால் இன்று நான் எவ்வளவு திடகாத்திரமாக உள்ளேன். என்னோடு இன்று கூட இங்கு குழுமியிருக்-கும் உடற்கல்வி ஆசிரியர்கள் யாரேனும் போட்டியிட சம்மதமானால் நான் வென்று காட்டுவேன் என்றார். தினசரி வெயிலிலும், மழையிலும் காய்ந்து, நனைந்து உழைக் கும் உழைப்பாளியின் உடல் அழகைப் பாருங்கள். அவர் உடற்கல்வியோ, தேகப் பயிற்சியோ செய்தது கிடையாது. ஆதலால் உடற்கல்வி அவசியம் இல்லை என்று எண்ணக் கூடாது உடல், மனம், ஆத்மா மூன்றும் ஒன்றுபட்டு செயல்பட, ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்த உடற்கல்வியும் தேகப்பயிற்சியும் அவசியம்.

உலக அரங்கிலே நம் இந்தியா இதுவரை ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு பதக்கம் கூட தனி நபர் போட்டிகளில் பெற்றது கிடையாது. ஏன்? அதற்கு முக்கியத்வம் நாம் அளிக்கவில்லை. அதனால் நாட்டுக்கு என்ன பிரயோசனம் என்று எண்ணி இருந்து விட்டோம். நம்மைவிட சிறு நாடுகளும் ஜனத்தொகை குறைந்த நாடுகளுமான ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் அநேக போட்டிகளில் வென்று பதக்கங்கள் பெறுகின்றன. அதை அவர்கள் தங்கள் நாட்டு கௌரவப் பிரச்சனைகளாகவும் தேசீயக் கொள்கைகளாகவும் எடுத்துக் கொள்கின்றனர்

இப்படிப்பட்ட சமயத்தில் தமிழகத்தில், சுமார் 45 லட்சம் மாணவர்கள் உடற் கல்வி கட்டாயப்பாடமாக ஆக்கப்பட்டதால், தினசரி விளையாட்டு மைதானங்களில் பற்பலவிதமான தேகப்பயிற்சிகள், விளையாட்டுப் போட்டிகள், தனி நபர் போட்டி களில் பங்கு கொண்டு பயிற்சி பெறுவதைக் காணமுடிகிறது. இதனால் இந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டு மாணவர் திறன் கூடியிருப்பதும், அதனால் அநேக போட்டிகளில் தமிழ்நாட்டின் பெயர் வருவதையும் காண்கின்றோம். மேலும் மாணவர்கள் பொது அறிவு, விளையாட்டுச் சம்பந்தமான செய்திகள், விளையாட்டு

களின் சரித்திரங்கள், விளையாட்டுகளில் திறமையைக் கூட்டுவதற்கான பயிற்சிகள் முதலியவைகளை தினசரி, வார, மாத செய்தித்தாள், மலர்கள் மூலமாக படிக்கும் ஆர்வம் பெற்று முனனேறி வருகின்றனர். பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மனத் தைரியத்தையும், பலருடன் பண்பாக பழகும் பக்குவத்தையும் பெறுகின்றனர்.

"சுவற்றை வைத்துத்தான் சித்திரம்" என்பது போல் தேக ஆரோக்கியத்தை வைத்துத்தான் கல்வியில் முன்னேற்றம் என்பதை அனைவரும் அறிய வேண்டும். உயர் கல்வி கற்க வெளிநாடு சென்று கற்க, உடல் நலம் தேவை. ஆதலால் அன்றாட உழைப்பு இல்லாதவர் அனைவரும், தனக்காகவும் நாட்டிற்காகவும் தன் உடலை நன்கு பேணி வளர்க்கவேண்டும்.

உடற்கல்வி கட்டாயப் பாடமாக்கப்பட்டபின் உடற்கல்வி ஆசிரியரின் வேலைப் பளுவும் பொறுப்பும் அதிகமாகி விட்டது விளையாட்டுமைதானத்தில் மாணவருடன் கூடி விளையாடி பயிற்சி அளிக்கும் நேரத்தைவிட, எழுத்து வேலையில் ஈடுபடும் நேரம் தான் அதிகம். உண்மையான உழைப்பைவிட எழுத்து மூலம் காட்டும் விபரத்திற்குத்தான் மதிப்பு கூடியிருக்கிறது. உலகப் போட்டிகளில் முக்கியமான தான நீளம் தாவுதல், உயரம் தாவுதல், குண்டு எறிதல் போன்ற போட்டிகள் உடற் கல்வித் தேர்வுப் பட்டியலில் இல்லை. இவைகளை கற்பிக்க நேரமும் இல்லை.

ஒரு உடற்கல்வி ஆசிரியர் காலை 6-30 மணிக்கு பள்ளிச் சுற்றுப்புற சுத்தம் கவனித்து, காலை மாணவர் பயிற்சி முடித்து, பிரார்த்தனைக்கூட்டம் கவனித்து, வகுப்பு கள் கவனித்து, மாலை விளையாட்டுக்கள் மற்றும் கட்டாயக் கல்வி தேர்வுகள் பயிற்சி அளித்து, மாவட்டப் போட்டிப் பயிற்சி நடத்தி முடிந்து வீடு திரும்ப மாலை 7 மணி ஆகிறது. இதற்கிடையில் நாடக மேடையில் உடை மாற்றம் செய்ய வேண்டி யுள்ளது. குடும்பத்தில் அதிக நபர் உள்ளதால் வீட்டுச் சாப்பாடு போக தினசரி 2 வேளை வீட்டுக் குழந்தைகளுக்குக்கூடத் தெரியாமல் சிற்றுண்டி அருந்த வேண்டி-யுள்ளது.

மேலே கண்ட குறைகளும், கஷ்டங்களும் நீங்க அரசு உதவுவதுடன் கிராமங்களிலும் தனிநபர் போட்டி நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பள்ளி கல்லூரி மாணவர்களுடன் பயிற்சி அளித்து அகில இந்திய, உலகப் போட்டிகளுக்கு அனுப்பினால், இந்தியா, அதிலும் தமிழ்நாடு உலகப் போட்டிகளில் பதக்கங்கள் பெற இயலாதா என்ன? தற்போதைய அரசு உடற்கல்விக்கென்றும் இளைஞர் உடற் பயிற்சிக்கென்றும் தனி இலாகா அமைத்து முன்னேற்றம காண உதவுவதற்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

With best compliments from

KRISHNAVENI ROADWAYS,

124-A, SOUTH MASI STREET,

MADURAI - 625001.

With best compliments from :

Lion B. Richard

ANTON BAKERY

VIRUDHUNAGAR

ஸ்ரீவில்லிபுத்தூரின் மாண்பு


சி. காளிமுத்து
பழைய மாணவன்

பெரியாழ்வார் கண்டெடுத்த
பூங்கோதை ஆண்டாளும்
அவதரித்த புனியிதுவே
அழகான ஸ்ரீவில்லிபுத்தூர்!
வைகுண்ட வாசனவன்
வையத்தின் தலைவனையே
வாழ்க்கைத் துணைவராக
வரித்திட்ட வனிதையூரே!
சிற்பியவன் சிலைகளாலே
அற்புதங்கள் மிகுந்திட்ட
பக்திபாயும் கோவிலுமே
சக்திநிறை சன்னதியே!
கலையழகு கொழித்திடும்
விலையில்லா செல்வம்போல
மலையான தேருமுள்ள
மதுரமான நகரமிதே!
நகரத்தின் பெருமையதை
நாடெல்லாம் கண்டிடவே
உயரமான கோபுரமாய்
கொடிவீசும் கோவிலூரே!

உடைந்த உள்ளம்

T. ANDAL
XI A.
D. G. Hr. S. School

மன மென்னும் மேடை தனில்
மண் குவளை எனும் இதயம்
கல் லடிகள் பட்டாலும்
கலை யாதே அவ்விதயம்
சொல் லடிகள் பட்டுவிட்டால்
சொல் லொண்ணா வேதனையால்
சுக்கு நூறாய்க் சிதறடுமே!



தமிழின் தவப்புதல்வன் பாரதி

S. A. ஸ்ரீவத்ஸன்,
11-ஆம் வகுப்பு, 'அ' பிரிவு,
கு. ச. இ. மேல்நிலைப்பள்ளி.

பாரதி தமிழகத்தின் தனிப்பெருமை. அவர் தமிழினத்தின் தவப்புதல்வன். கம்பனுக்குப்பின் தமிழ் மக்களுக்கு பாரதிதான் உணர்ச்சியாற்றல், கற்பனையாற்றல், கவியாற்றல், அழகுக் கலையாற்றல். இவை சிறந்த கவியின் அம்சங்கள். இவையனைத்தையும் ஒருங்கே பெற்ற பாரதி இருபதாம் நூற்றாண்டு கண்ட மாபெரும் புலவர்.

பன்மொழிப் புலமை பெற்று, தமிழ்த்தாயை சீரிய அரியாசனத்தில் ஏற்றி உலக அரங்கினிலே ஏற்றமுடன் விளங்க தம் வாழ்வையே அர்ப்பணித்த தியாக கவிஞர். தாம் கற்ற ஆரியம், இந்தி, வங்கம், பிரெஞ்சு முதலிய பல மொழிகளையும் ஒருசேர எண்ணுகிறார். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ-தெங்கும் காணோம்' என உரைக்கிறார். ஆம். தமிழ் புலவர் பாரதிக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, வங்கம் உள்ளிட்ட பன்னிரண்டு மொழிகள் தெரியும். எனவேதான் எனக்குத் தெரிந்த மொழிகளிலே தமிழ்தான் மிக்க தேனாய் ஓடுவதுபோல் உள்ளது எனக் கூறுகிறார். தமிழ் பாடும்போது, தமிழ் பேசும்போது தனக்கு ஏற்படும் உள்ளக் கிளர்ச்சியை கூறுகிறார். தன் காதுகளில் இன்ப, இனிய தேன் தாரை தாரையாகப் பெருகுகிறதாம். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே!' எனக் கூறுகிறார்.

ஆம். இத்தகைய இனிய சுவைமிக்க தேனை இவ்வுலகம் பரவ வழி கூறுகிறார். 'தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவும் வழிசெய்தல் வேண்டும்' எனக் கூறுகிறார். ஆம். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது தமிழன் கூற்று. அப்படிப்பட்ட தாம் பெற்ற அவ்வின்பத்தை உலகத்தாரும் மகிழ்ந்து அதைப் பருகவேண்டும் எனக் கூறுகிறார். ஆம். தமிழனுக்குத்தான் எத்தனை பெருமை! எத்தனை அறிவு! அதனால் போலும் பாரதி, 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என அறைகிறார். அவர் நினைவில் உலகத் தமிழறிஞர்களும், புலவர்களும் வந்து நின்றனர். அவர் அவர்களை ஒரு கணம் நினைவு கூறுகிறார். பின், 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை உண்மையிது வெறும் புகழ்ச்சியில்லை' எனக் கூறுகிறார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கீந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'. சாத்திரம் மணம் பாரெங்கும்

கண்ட தமிழ்நாடு' சிலப்பதிகாரம் என்னும் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்றெல்லாம் புகழுகிறார். ஆங்கில மோகம் பிடித்தலைந்த தமிழர்களைப் பார்த்து, 'சேமமுற வேண்டுமெனில் தெருவெங்கும் தமிழ் முழக்கம் செய்வீர்' எனக்கூறுகிறார்

அடுத்தபடியாக "அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்" என்பதுபோல தாங்கள் கற்ற தமிழே எல்லாம் என்று மனப்பான்மை கொண்டு புதுமை கண்டு, முகம் சுளித்த வைதிகத் தமிழர்களை நினைவு கூர்கிறார். 'மறைவாக நமக்குள்ளே பழங்கதை சொல்வதில் மகிமை இல்லை' எனக்கூறுகிறார். மாறுதல் வேண்டாத நம் பண்டிதர்களின் மனத்தடிப்பை சுக்கு நூறாக உடைத்-தெறிந்து, அதே மூச்சில் 'சென்றிடுவோம் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என கலையில் பரந்த மனப்பான்மை கொண்டு அகில உலக மொழி சம்மேளனத்தில் தமிழன்னையை அரியாசனம் ஏற்றுகிறார். அவர் தமிழ் சிறந்து விளங்க வழி கூறுகிறார். 'பிறநாட்டறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழி பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய தமிழ்ப் புதுநூல்கள் இயற்றப்பட வேண்டும்' என திருப்பணியிடுகிறார். வெளிநாட்டார் அனைவரும் நம் தமிழ் மொழியின் பெருமையினை அறிந்து வணக்கம் செலுத்தும் வழியினை ஏற்படுத்த வேண்டும் என முழங்குகிறார். உள்ளத்தில் உண்மையொழி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். வெள்ளத்தின் பெருக்கையைப்போல் கலைப்-பெருக்கும், கவிப் பெருக்கும் மேவ வேண்டும் என்று தமிழ் இலக்கியச் செழிப்பின் தேவையை வற்புறுத்துகிறார். 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டோர் இங்கமரர் சிறப்புக் கண்டார்' என தமிழுக்குப் பூசனை புரிகிறார் சுப்பிரமணிய பாரதி.

வானம் அளந்ததனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழியவே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

என வாழ்த்தி தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கிறார். பாரதியின் தமிழ்ப்-பணிகளை எடுத்துச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இத்துடன் எனக்குத் தெரிந்த சிறுகட்டுரையை முடித்து தவறேனும் இருந்தால் மன்னித்து திருத்தும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க பாரதி புகழ்! வளர்க தமிழ்!

ஜெய்ஹிந்த்.

With best compliments from:-

LIONS CLUB OF
SRIVILLIPUTTUR.


With best compliments from:

Tel: INDEXPLO Phone: 88244

S. R. Subramaniam & Sons,

Consignment Agents,
INDIAN EXPLOSIVES LIMITED,
Explosive Division
208, Trichy Road,
SULUR - 641 402.
Coimbatore Dist. — Tamil Nadu.

With best compliments from



THE ORIENT LITHO PRESS

P. B. 17

SIVAKASI - 626123.

Acknowledgement.


We wish to convey our profound and whole hearted gratitude to all those who have contributed towards the bringing out of this souvenier.

Our heart felt thanks also go to the participants who have given generous donations for our centenary building.

Our grateful acknowledgement are due to the advertisers and well wishers and alumni.

Editor-in-Chief.


With the best compliments from:



PUNJAB PROCESSORS LTD.,

36, REGAL BUILDINGS,

NEW DELHI.


My dream house will stand deep in a grove of palms... with the sea breeze at the windows... a music den in the attic... and a Neycer bathroom in marigold and black
Neycer
Beauty in your bathroom
Beauty that lasts
OBM6250